எஸ்.எஸ்.எல்.சி. படித்திருக்க வேண்டும். அதுமட்டுமல்லாமல், என்.டி.சி. என்.ஏ.சி. சர்டிபிகேட் வைத்திருக்க வேண்டும் எம்பிளாய்மெண்டிலிருந்து தான் எடுக்க வேண்டும். ஆகையால் போர்டிற்கு க்வாலிபிகேஷன் டிசைட் பண்ணுகின்ற அதிகாரம் உண்டு. அதனால் கோர்ட் தலையிட முடியாது என்று தெரிவித்திருக்கிறார்கள். சிலர் அதை எதிர்த்து சுப்ரீம் கோர்ட்டிற்குப் போயிருக்கிறார்கள். ஆகையால் அது குறித்து மேலும் விளக்கமாக பேசுவது நீதிமன்றத்திலே உள்ள பிரச்சினையை எடுப்பது இப்போது தேவையில்லை என்று நான் கருதுகிறேன்.

ரயில்வே லெவல் கிராசிங் அமைத்தல்.

* 3140 திரு. செ. இராமலிங்கம் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருவிடைமருதூர் ஒன்றியம், திருபுவனம் பேரூராட்சி, காங்கேயம்பேட்டை ஆதி திராவிடர் தெருவிற்கு செல்லும் சாலையில் ஒரு ரயில்வே லெவல் கிராசிங் அமைக்க மத்திய அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும் ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருபுவனம் பேரூராட்சியை ஒட்டியுள்ள அந்த ஆதிதிராவிட குடியிருப்புகளுக்கு நடைபாதை இல்லாத ஒரு நிலைமை இருக்கிறது. 1978-ல் அன்றைக்கு ரயில்வே அமைச்சராக இருந்த மாண்புமிகு மது தண்டவதே அவர்களுக்கு இது சம்பந்தமாக எழுதி, அவர் கைப்பட எனக்கு பதில் அளித்திருக்கிறார்கள். அங்கே இருக்கின்ற உள்ளாட்சி மன்றம், டவுன் பஞ்சாயத்து அல்லது யூனியன் இதற்கான இன்ஸ்டலேஷன் சார்ஜை ஏற்றுக் கொண்டால் நாங்கள் அந்த வேலையை எடுத்துக் கொள்கிறோம் என்று எனக்கு எழுதியிருக்கிறார்கள். தற்போது அமைச்சரவர்கள் சொல்கின்ற தகவல் வித்தியாசமாக இருக்கிறது. எனவே இந்த நிலைமையை கவனத்திற் கொண்டு இந்த லெவல் கிராசிங் அமைக்க மத்திய அரசை நமது அரசு வலியுறுத்துமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, இது பஞ்சாயத்து சாலை. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டபடி காங்கேயன்பேட்டையிலிருந்து அரிசனப் பெருங்குடி மக்கள் வாழ்கின்ற பகுதிக்கு போகின்ற ரோடுக்கு ரயில்வே லைன் இடையில் குறுக்கிடுகிறது. அதிலே காங்கேயன்பேட்டை யிலிருந்து இரயில்வே நிலையம் வரையில்தான் சாலை இருக்கிறது. அந்த அரிசன பெருங்குடி மக்களுக்கு அந்த சாலைகூட இல்லை. ஆகவே இது பஞ்சாயத்துக்கு முழுக்க முழுக்க உட்பட்டதாகும். எனவே நீங்கள் லெவல் கிராசிங் போட வேண்டுமென்று கேட்டால், கிட்டத்தட்ட ரூ. 7.20 இலட்சம் செலவாகும். அதற்கு வருடாந்திர பராமரிப்புச் செலவு செய்ய வேண்டுமென்று கேட்டிருக் கிறார்கள். இதை திருவிடைமருதூர் ஊராட்சி ஒன்றியமோ அல்லது பஞ்சாயத்தோ ஏற்றுக் கொள்ளுமானால் எங்களுக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை.

திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது லெவல் கிராசிங் கேட் கீப்பருக்கான சம்பளத்தை ஊராட்சி ஒன்றியம் அல்லது பேரூராட்சி ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று சொன்னார்கள். தற்போதிருக்கின்ற நிதி நிலைமையைப் பற்றி நம் அனைவருக்கும் தெரியும். எனவே அது இயலாத ஒன்று. எனவே அதற்கான அமைப்புச் செலவு அதாவது இன்ஸ்டலேஷன் சார்ஜஸ்சை நாங்கள் ஏற்றுக் கொள்வதாக ஒரு தீர்மானம் போட்டு, முடிவு எடுத்து அனுப்பியிருக்கிறோம். எனவே இன்ஸ்டலேஷன் சார்ஜஸ் ரூ. ஏழு இலட்சத்திற்கு நிச்சயமாக வராது. இன்ஸ்டலேஷன் சார்ஜசை நாங்கள் கட்டினால் அரசு அந்த லெவல் கிராசிங் அமைக்க ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

10–00 மணி

மாண்புமிகு திரு. துரைமுருகன் : துணைத் தலைவர் அவர்களே, இன்ஸ்டலேஷன் சார்ஜ் மட்டும் அல்ல பராமரிப்புச் செலவையும் நீங்கள் தான் ஏற்றுக் கொள்ள வேண்டும். பஞ்சாயத்தினுடைய நிதி நிலையைப் போலத்தான் ஹைவேஸ் சினுடைய நிதிநிலையும் இருக்கிறது. ஒரு ஊரை ஏற்றுக் கொண்டால் எல்லா ஊர்களையும் ஏற்றுக் கொள்ள வேண்டிய சூழ்நிலை உருவாகும். அதற்குச் சட்டத்திலே இடம் இல்லை.

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவை உறுப்பினர் இராமலிங்கம் அவர்கள் கேட்கிற இடம் மிக அவசியமான ஒரு முக்கியமான சாலையாகும்......

1990 ஏப்ரல் 17]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் ஒப்புதலோடு ''வினா நேரம்'' நீட்டிக்கப்படுகிறது.

திரு. இரெ. இராசமணிக்கம் : மிக முக்கியமான சாலையாக இருக்கிற காரணத்தால் அவசியத்தைக் கருதி மத்திய சர்க்காருக்கு நம்முடைய சர்க்கார் மூலம் தொடர்பு கொண்டு அந்த லெவல் கிராசிங்கை அமைத்துக் கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : முயற்சிப்பதில் ஒன்றும் தவறு இல்லை.

மின் வசதி.

*5493 திரு. கே. சின்னசாமி :
மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

கொல்லிமலைப்பகுதியில் உள்ள அனைத்து ஊர்களுக்கும் மின் வசதி செய்துதர அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. துரைமுருகன்: பேரவைத்தலைவர் அவர்களே, கொல்லிமலையிலுள்ள 15 பெரிய கிராமங்கள் மற்றும் 216 சிற்றூர்களில் 14 பெரிய கிராமங்களுக்கும் 109 சிற்றூர்களுக்கும் ஏற்கனவே மின்வசதி அளிக்கப்பட்டுள்ளது. மீதியுள்ள இடங்களுக்கு மின் இணைப்பு கொடுக்க தக்க நடவடிகை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொல்லிமலையில் வாழும் மலைவாழ் மக்கள் இரவு நேரங்களில் குகையில் வாழ்வது போன்று வாழ்ந்து வருகிறார்கள். அங்கு மின் வசதி இல்லாத காரணத்தால் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குச் செல்ல வேண்டுமென்றால் மண்ணெண்ணெய் பந்தம் பிடித்துக் கொண்டு தான் செல்ல வேண்டும். மலைவாழ் மக்களின் இந்த அவல நிலையைப் போக்க போர்க் கால நடவடிக்கை எடுத்து மின்சார தெரு விளக்கு வசதியை அரசு செய்து கொடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : போர்க்கால நடவடிக்கை எடுக்காமலேதான் 15 பெரிய கிராமங்களில் 14 பெரிய கிராமங்களுக்கும் மின் வசதி செய்து தரப்பட்டிருக்கிறது. 216 ஹேம்லெட்ஸ் சிறிய கிராமங்களில் 109] கிராமங்களுக்கு